**செய்தி வெளியீடு எண்: 625** **நாள்: 17.10.2012**

**அனைத்து மாவட்டங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்த ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்கள் கண்காட்சி அமைக்க அழைப்பு**

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை கலைப் பணிகளை ஒருங்கிணைத்து பண்பாடு மாறாத மரபுக் கலைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தி வருகின்றது.

இப்பாரம்பரிய மிக்க ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பண்டைய கலாச்சாரத்தின் பெருமைகளை இளையதலைமுறையினருக்கு எடுத்துரைப்பதாக உள்ளன. இவை தமிழகத்தின் கலாச்சாரத்தையும், கலை உணர்வையும் வெளிப்படுத்தும் கலை பெட்டகமாக விளங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் இக்கலைகளில் ஈடுபட்டுவருகின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்கள் தங்களது கலை திறமைகளை வெளிப்படுத்திடும் வகையில், அவர்களுடைய படைப்புகளை அந்தந்த மாவட்டங்களில் காட்சிப்படுத்திடவும், அவர்களது திறமைகளை மக்களிடையே கொண்டு செல்வதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இவ்வாணைக்கிணங்க தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஓவியம் மற்றும் சிற்பம் கலைஞர்கள், தங்களது சிறந்த படைப்புகளை கண்காட்சி வைக்கின்ற வகையில் தயார் நிலையில் இருப்பவர்கள், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்றினை இணைத்து, தன் குறிப்புடன் 31.10.2012 ஆம் நாளுக்குள் ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சி வளாகம், இரண்டாவது தளம், ஆல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை – 600 008 (தொலைபேசி எண்.28193195) என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இக்கண்காட்சி வைத்திடுவதற்கான அனைத்து ஏற்பாட்டிற்கான செலவினத்தை அரசு விதிகளுக்குட்பட்டு கலை பண்பாட்டுத் துறையே ஏற்றுக் கொள்ளும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**